செய்தி வெளியீடு எண்.49-2016 நாள்: 29.07.2016

# விழுப்புரம் மாவட்டத்தில் 2015-16ம் கல்வியாண்டில் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற முன்னாள் படைவீரர்களின் சிறார்களில் முதல் மதிப்பெண் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்றுள்ள சிறார்களுக்கு பரிசுத்தொகை வழங்கப்படவுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

*****

விழுப்புரம் மாவட்டத்தில் 2015-2016ம் கல்வியாண்டில் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற முன்னாள் படைவீரர்களின் சிறார்களில் முதல் மதிப்பெண் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்றுள்ள சிறாருக்கு பரிசுத்தொகை வழங்கப்படவுள்ளது. மொத்த மதிப்பெண்ணில் 1147-க்கு அதிகமாக மதிப்பெண் பெற்றுள்ள மாணவ/ மாணவியரின் பெற்றோர்களான முன்னாள் படைவீரர்கள் கீழ்காணும் ஆவணங்களுடன் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரில் அணுகி விண்ணப்பத்தினை 31.08.2016-க்குள் சமர்ப்பிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

1. அசல் படைவிலகல் சான்று மற்றும் நகல்
2. 2015-2016ம் கல்வியாண்டின் சான்றொப்பமிட்ட மதிப்பெண் பட்டியல் - நகல்
3. அடையாள அட்டை நகல்
4. வங்கிக் கணக்கு புத்தக நகல்

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.